**13.11.2025.**

**MCOP.No.14/2017**
**ம.சா.2 :   அன்னப்பன்**

**<u>3ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>:-**

1) இந்த விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். ஆவணங்களின் அடிப்படையில் தான் சாட்சி சொல்ல வந்துள்ளேன். மேற்படி அரசாங்க ஜீப்பை ஓட்டி சென்ற ஓட்டுநரின் ஓட்டுநர் உரிமம் மற்றும் பாலிசியை நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். மேற்படி ஜீப்பை ஓட்டி சென்ற ஓட்டுநருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்பதால் தான் நான் ஒப்படைக்கவில்லை என்றால் சரியல்ல. மேற்படி ஆவணங்களில் கோப்பில் இல்லாததால் ஒப்படைக்கவில்லை. நான் இந்த விபத்து தொடர்பாக இழப்பீடு கோரி நான் வழக்கு தாக்கல் செய்துள்ளபோது அதற்குரிய ஆவணங்களை ஒப்படைக்க வேண்டியது அவசியம் என்று சொன்னால் பதிவு சான்று ஆவணங்களை ஒப்படைத்துள்ளோம். மேற்படி ஆவணங்கள் கோப்பில் உள்ளது. ஜீப்பிற்கு நஷ்ட ஈடு கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ள நிலையில் அந்த ஜீப்பிற்கு தற்போது நிலை பற்றி எனது நிருபண வாக்குமூலத்தில் சொல்லி உள்ளேனா என்றால் சொல்லவில்லை.

2) நீதிமன்றத்தில் ஒப்படைத்துள்ள மோட்டார் வாகன ஆய்வறிக்கை ம.சா.ஆ.3ல் மேற்படி ஜீப்பை ஓட்டி சென்ற ஓட்டுநருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். ம.சா.ஆ.4ல் வேண்டுகோள் கடிதத்தில் மேற்படி ஜீப்பை வாங்கிய தேதி 02.09.1992 என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி ம.சா.ஆ.4ல் மேற்படி வாகனம் நீண்ட தூரம் ஓட்டுப்பட்டுள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேலும் மேற்படி வாகனத்தின் மதிப்பு பழமையானது (Depreciation value) என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி வாகனம் ஏற்கனவே அதிக பழுதாக இருந்தது என்றும் நான் இந்த வழக்கின் விபத்தினால் தான் பழுது ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல.

3) இந்த மனுவில் கோரப்பட்டுள்ள காலம் எண்.21ல் கோரியுள்ள வாகனத்தின் material cost and labour charge என்பதற்கான பில்கள் எதுவும் நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். அதேபோல material cost and labour charge யை எதன் அடிப்படையில் கோரப்பட்டுள்ளது என்பதற்கான விவரத்தையும் ஆவணத்தையும் நீதிமன்றத்தில் ஒப்படைக்கவில்லை என்றால் சரியல்ல. நான் இந்த மனுவில் அசல் ஆவணங்கள் ம.சா.ஆ.4,5,6 அசல் ஆவணங்களை ஒப்படைக்கவில்லை என்றால் சரிதான். அசல் ஆவணங்களை ஒப்படைத்தால் மனு எனக்கு விரோதமாகிவிடும் என்பதாதல் அதை ஒப்படைக்கவில்லை என்றால் சரியல்ல. அசல் ஆவணங்களை ஒப்படைக்காமல், செலவு செய்ததற்கான ஆவணங்களை ஒப்படைக்காமல் இழப்பீடு கோரப்பட்டது சட்டப்படி ஏற்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. மேற்படி விபத்து யாரால் எப்படி ஏற்பட்டது என்று கண்ணுற்ற சாட்சிகளை விசாரிக்க போகிறோமா என்றால் இல்லை. என்னுடைய பிரமாண வாக்குமூலத்திலும் மனுவிலும் மேற்படி ஜீப் வாகனம் சிவப்பு விளக்குகளை எரியவிட்டு சைகை விளக்குகளை எரியவிட்டு நின்று கொண்டு இருந்ததாக சொல்லப்படவில்லை என்றால் சரிதான்.

4) எந்தவித சைகைகளையும் காண்பிக்காமல், சாலையில் வரும் போக்குவரத்தை கவனிக்காமல் திடீரென்று நெடுஞ்சாலையில் நடு ரோட்டில் ஜீப் வாகனத்தை நிறுத்தியதால் தான் மேற்படி விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. 2ம் எதிர்மனுதாரர் ஓட்டுநர் அவருடைய வாகனத்தை சரியான திசையில் சரியான வேகத்தில் ஓட்டி வந்தார் என்றும் நடு ரோட்டில் ஜீப் வாகனத்தை நிறுத்தியதால் தான் மேற்படி விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. மேற்படி ஜீப் வாகனம் அரசு துறையை சேர்ந்த வாகனம் என்பதால் 2ம் எதிர்மனுதாரர் வாகனம் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. மேற்படி வழக்கின் மாதிரி வரைபடம் மற்றும் குற்ற பத்திரிக்கை தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. மேற்படி விபத்து சமயத்தில் 2ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநருக்கு ஓட்டுநர் உரிமம் இல்லை என்று

சொன்னால் அது பற்றி எனக்கு தெரியாது. பாலிசி விதிமுறைகளை மீறி 2ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநரான 1ம் எதிர்மனுதாரர் ஓட்டுநர் உரிமம் இல்லாமல் வாகனத்தை ஓட்டியதால் மேற்கண்ட விபத்திற்கு 3ம் எதிர்மனுதாரர் நிறுவனம் எவ்வித இழப்பீடும் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. ஜீப்பிற்கு செலவு செய்ததற்கான ஆவணங்களை ஒப்படைக்காததாலும் மேற்படி விபத்திற்கு ஜீப் வாகனத்தின் ஓட்டுநரின் கவனக்குறைவு தான் விபத்திற்கு காரணம் என்பதாலும் ஓட்டுநர் உரிமம் இல்லாத நபரை ஜீப் வாகனம் ஓட்ட அனுமதித்ததாலும் இந்த விபத்திற்கு 3ம் எதிர்மனுதாரர் நிறுவனம் எவ்வித இழப்பீடும் கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. எனவே மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

" என்னால்/ என் முன்பாக மேற்படி சாட்சியம் பதியப்பட்டு, சாட்சிக்கு பொருள் விளக்கப்பட்டு/ படித்து காண்பிக்கப்பட்டு, அது சரி என அவரால் ஒப்புக் கொள்ளப்பட்டது."

GANESAN S

Digitally signed by GANESAN S
Date: 2025.11.13 17:41:37 +0530

**Accidents Claim Tribunal, Attur.**